பக்கங்கள்: 10 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | சித்திரை 06 ஞாயிற்றுக்கிழமை 19.04.2020 | கதிர் 33

## தேர்தல் ஆணைக்குழு மீது அழுத்தம்!

### ஆணையாளர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 19

பொதுத்தேர்தலுக்கான திகதி ஒன்றை நிர்ணயிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழுத்தம் வழங்கப்படுவதாக ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் குற்றம்சாட்டியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கிய கூட்டமொன்று நாளை கொழும்பில் இடம்பெறவுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொரோனா அச்சம் காரணமாக எதிர்வரும் 25ஆம் திகதி தேர்தலை நடத்துவது என்பது முடியாத செயலாகும். இதனால் தேர்தலைப் பிற்போட யோசித்திருந்தோம். அத்துடன், இதற்கமைய நீதிமன்றத்தின்

2

**காலைக்கதிர்** Kalaikkathir மாலைப்பதிப்பு

**நாளை முதல் பகல் வேளையில் ஊரடங்கு தளர்த்தப்படுவதால் நாளை முதல் எமது காலைக்கதிர் மாலைப் பதிப்பு அச்சில் வெளிவரும். வழமை போல எங்கள் முகவரிடம் அச்சுப் பிரதியையும் வாசகர்கள் பெற்றுக் கொள்ளலாம்.**

**- நிர்வாகம் -**

## யாழ்ப்பாணத்தை சேர்ந்த 4 பேர் குணமடைந்தனர்

யாழ்ப்பாணம், ஏப். 19

பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிப்பிலிருந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வெலிகந்தை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு பேர் முழுமையாகக் குணமடைந்துள்ளனர்.

2

## அத்தியாவசியப் பொருள்கள் போதுமானவை கையிருப்பில்!

கொழும்பு,ஏப்.19

இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் போதுமானளவு கையிருப்பில் உள்ளன எனவும், மக்கள் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் அரசு அறிவித்துள்ளது.

அரிசி, பருப்பு, ரின் மீன் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைப் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என உணவுத் திணைக்களத்தின் 2

## மதுபானச்சாலைகளை மீள திறக்க அனுமதி!

கொழும்பு, ஏப். 19

சில்லறை மதுபான விற்பனைக்காக மதுவரித் திணைக்களத்தின் உரிமங்கள் பெற்ற மதுபான நிலையங்கள் ஊரடங்கு தளர்த்தப்படும் கால எல்லைக்குள் சுகாதார அறிவுறுத்தல்களுக்குக் கட்டுப்பட்டு திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

2

# தேர்தலுக்காக மக்களை ஆபத்துக்குள் தள்ளாதீர்!

## கோட்டாபய அரசிடம் சுரேஷ் வற்புறுத்தல்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப். 19

நாட்டின் சுகாதாரத் துறையினரின் ஆலோசனைகளைப் புறம் தள்ளி கோட்டாபய அரசு தேர்தலுக்காக மக்களை ஆபத்தில் தள்ளப் போகின்றதா எனக் கேள்வி எழுப்பியுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தேர்தலுக்காக மக்களை ஆபத்துக்குள் தள்ளிவிடாதீர்கள் எனவும் கேட்டுள்ளார்.

2



## முதல் முறையாக நீரில் சிசு பிரசவம்

கொழும்பு, ஏப். 19

கொழும்பு நைன்வெல்ஸ் வைத்தியசாலையில், நீரில் சிசுவைப் பிரசவம் செய்யும் முறைமை முதல் முறையாக கையாளப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம், இரண்டு கர்ப்பிணிப் பெண்கள் சிசுவைப் பிரசவித்துள்ளனர் என்றும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

2

## சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனை முக்கியம்

### தேர்தல் ஆணைக்குழுவை வலியுறுத்துகின்றது பவ்ரல்

நாடாளுமன்றத் தேர்தல் குறித்த தீர்மானங்களை எடுப்பதில் நெருக்கடிகள் காணப்படுமாயின் சட்டமா அதிபர், சுகாதார தரப்பினரின் ஆலோசனைகளை தேர்தல்கள் ஆணைக்குழு பெற்று உறுதியான தீர்மானத்தினை

2

## இன்று 15 பேர் கொரோனா தொற்றுடன்

இன்றைய தினம் மேலும் 15 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவை பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த 15 பேரும் கொழும்பு வாழைத் தோட்டம் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதன்படி இலங்கையில் கொரோனோ (கொவிட் 19) நோயாளிகளின் எண்ணிக்கை 269 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார சேவை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

91 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

2

## மஹிந்தவின் கருத்து தவறானது

### ஸ்ரீகாந்தா சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 19

'திகதி குறிப்பிடாமல் தேர்தலை ஒத்தி வைக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு இல்லை' என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்ட கருத்து தவறானது எனத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொதுத்தேர்தலினை விரைவில் நடாத்தியாக வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவாக,

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## முதல் முறையாக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், இலங்கையின் முதல் முறையாக நீரில் பிரசவம் செய்யும் முறைமையை, நைன்வெல்ஸ் வைத்தியசாலையே அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த நீரில் பிரசவம் செய்யும் முறைமைக்கு, அந்த வைத்தியசாலையில் 2020ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து சிரேஷ்ட தாதியாகப் பணியாற்றி வந்த இங்கிலாந்தைச் சேர்ந்த பெண்ணே அனைத்து வசதிகளையும் சரியான முறையில் ஏற்படுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக, வைத்தியசாலையின் தாதிமார் அனைவரும் தரமான பயிற்சிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்றும் இதுவொரு ஆரோக்கியமான பிரசவ முறை என்பது குறித்துக் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தெளிவுபடுத்தப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்ப்பாணத்தை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அரியாலையைச் சேர்ந்த நான்கு பேரே இவ்வாறு முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பும் அவர்களை வெலிகந்தையிலிருந்து அம்புலன்ஸில் அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்கள் வீடுகளுக்கு திரும்பினாலும் 14 நாள்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு வீட்டிலேயே இருப்பார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை தேவாலயத்தில் சுவிட்ஸர்லாந்திலிருந்து வருகை தந்த போதகரால் கடந்த மார்ச் 15ஆம் திகதி நடத்தப்பட்ட ஆராதனையில் பங்கேற்றவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

சுவிஸ் போதகருடன் நெருக்கமாகப் பழகிய மானிப்பாயைச் சேர்ந்த போதகர், சுவிஸ் போதகரின் சாரதி உள்ளிட்ட அரியாலை மற்றும் மானிப்பாய், வவுனியாவைச் சேர்ந்த 20 பேர் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கடந்த மார்ச் 23ஆம் திகதி நிறுவனத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்கள் 20 பேரிடமும் ஏப்ரல் முதலாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் மாதிரிகள் பெறப்பட்டு முதல்கட்ட பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் மானிப்பாயைச் சேர்ந்த மதபோதகர் உள்பட 6 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

அவர்கள் 6 பேரும் வெலிகந்தை வைத்தியசாலை கோரோனா சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டனர். அவர்களில் நால்வரே இவ்வாறு முழுமையாகக் குணமடைந்துள்ளனர்.

## அத்தியாவசியப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர் நாயகம் ஜே.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

அதற்கமைய, லங்கா சதொச, கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஆகியவற்றினூடாக உணவுப் பொருள்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு ஊடாக நிவாரண விலையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் காணப்படும் மொத்தக் களஞ்சியத்தை ஆராய்ந்து தேவையான அளவு உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய, தூதரகங்கள் ஊடாக இணைப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மாதமொன்றுக்கு இரண்டு லட்சம் மெட்ரிக் தொன் அரிசி தேவைப்படுவதாக உணவுத்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜே.கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டார்.

நெல் அறுவடையின் பின்னர், தேவையைப் பூர்த்தி செய்வதில் எவ்வித சிக்கலும் ஏற்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## இன்று 15 பேர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

7 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போது 171 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு ஐ டி எச் வைத்தியசாலையிலும், வெலிகந்த மற்றும் முல்லேரியா ஆதார வைத்திய சாலைகளில் அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதேபோல் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகளுடன் 100 க்கும் அதிகமானவர்கள் நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

## சுகாதாரத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கவேண்டும்எனபவ்ரல்அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலுக்கான தினத்தினை அறிவிப்பது தொடர்பில் நாளைய தினம் தேர்தல்கள் ஆணைக்குழு கூடி ஆராயவுள்ள நிலையில் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.அந்தக் கடிதத்தில் –

'நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுவதற்கு நாம் எதிரானவர்கள் அல்லர். ஆனால் நடத்தப்படவுள்ள நாடாளுமன்றத் தேர்தலானது சுதந்திரமானதாக அமைய வேண்டும். அனைவரினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதாக அமைய வேண்டும்.

தற்போது சூழலில் பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தவில்லை. கொரோனாவின் தாக்கம் முழுமையாக சமூகத்திலிருந்து அகன்றுவிட்டதாக எந்தவொரு உறுதிப்பாடும் வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் அடுத்த மாத இறுதியில் நாடாளுமன்றத் தேர்தலை திகதியை அறிவிப்பது பொருத்தமானதாக இருக்காது. தேர்தலுக்கு ஒருசில நாள்களுக்கு முன்னர் நாடு வழமைக்கு திரும்பி விடும் என்ற நம்பிக்கையில் தீர்மானத்தினை எடுக்க முடியாது.

ஜனநாயகத்தினை முழுமையாக நிலைநாட்டுவதானால் வேட்பாளர்கள் சுதந்திரமான பிரசாரங்களை முன்னெடுப்பதையும் 16 மில்லியன் வாக்களர்களினதும் சுதந்திரமான நடமாட்டத்தினையும் உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

ஆகவே அதனடிப்படையியே தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல் தினம் பற்றி அறிவிப்பினை செய்வதற்கு முன்னதாக எம்முடன் கலந்தாலோசனைகளை நடத்தவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தி தருமாறு கோருகின்றோம்.

அதுமட்டுமன்றி தேர்தல்கள் ஆணைக்குழுவானது தற்போதைய சூழலில் முடிவுகளை எடுப்பதற்கு நெருக்கடியை எதிர்கொள்ளுமாயின் சட்டமா அதிபரினதும், சுகாதார தரப்பினரதும் ஆலோசனைகளைப் பெற முடியும். அதனடிப்படையிலேயே இறுதித் தீர்மானம் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்' – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேர்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனையினை பெற்றுக்கொள்ளுமாறு நாம் ஜனாதிபதிக்கு தெரிவித்தோம். எனினும் அவர் அதற்கு மறுப்பு தெரிவித்து எங்களை ஒரு திகதியினை அறிவிக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

அதேபோன்று யாழ்ப்பாணத்திற்கு தற்போது கொண்டுவரப்படும் நிவாரணப் பொருள்களை அங்குள்ள அரசியல்வாதி ஒருவர் பெற்றுக்கொண்டு பின்னர் அவற்றினை தான் வழங்குவது போன்று விநியோகம் செய்கின்றார் – என்றார்.

# 269 பேருக்கு கொரோனா

நாட்டில் மேலும் 15 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 269 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை இன்று கொரோனா வைரஸ் நோயாளிகளாக அடையாளம் காணப்பட்ட மேலும் 05 பேர் குணமடைந்தனர் என்றும் இதுவரை 91 பேர் குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## மஹிந்தவின் கருத்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுத்தேர்தலை ஒத்திவைக்கின்ற அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை என்கிற கருத்து அரச தரப்பிலே நேற்று முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் மூன்றாவது உப பிரிவு இதற்கு ஆதரவாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 24ஆவது பிரிவின் மூன்றாவது உப பிரிவினை எடுத்துப் பார்த்தால் தேர்தலுக்கு திகதி குறிப்பிடப்பட்டு நெருக்கடி நிலைமை அல்லது எதிர்பார்க்கப்பட்டிராத சூழ்நிலைகள் காரணமாக திட்டமிடப்பட்ட படி அறிவிக்கப்பட்ட திகதியில் தேர்தலை நடத்த முடியவில்லை என்றால் தேர்தல் ஆணை யாளர் மீண்டும் பிரகடனத்தின் மூலம் தேர்தலுக்கு இன்னுமொரு திகதியை நியமிக்க முடியும் என்றுதான் கூறப் பட்டிருக்கின்றது – என்றார்.

## மதுபானச்சாலைகளை மீள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைசின் செயலாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் கோவிட் - 19 நோயைத் தடுப்பதற்கான பிற பாதுகாப்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகளுக்கு இணங்குவதற்கான நிபந்தனைகள் மற்றும் ஊரடங்கு உத்தரவு, சமூக இடைவெளிக்கு உட்பட்டு மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிபந்தனைகளுக்கு இணங்கத் தவறும் மதுவரி உரிமம் பெற்ற இடங்கள் தொடர்பாகத் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கவும், மதுபானத் தொழில் தொடர்பாக அதிகபட்ச அளவிலான தொழில் ஒழுக்கத்தைப் பேணவும் அனைத்து மதிவரி அதிகாரிகளுக்கும் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தலுக்காக மக்களை ஆபத்துக்குள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் தொடர்பாக சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுரைகளைக் கேட்காமல் அரசு தேர்தலை நடத்துவதற்காக அவசரமாகச் செயற்பட்டு வருகின்றது.

இது மக்களுக்குப் பாதாகத்தன்மையை ஏற்படுத்தலாம் என்றே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது மக்களுக்கு பாரிய விளைவுகளை உருவாக்கலாம். இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் 250க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் 7 பேர் வரை உயிரிழந்தனர். இவ்வாறான நிலையில் கொரோனா அச்சுறுத்தலானது தொடர்ச்சியாக நாட்டில் இருப்பதாகச் சுகாதாரத் துறையினர் கூறுகின்றனர்.

எனினும் அரசு அவர்களின் கருத்துக்களை செவிமடுக்காது தேர்தலை நடத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட்டு வருகின்றது. இது மக்களுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

நடைபெற உள்ள தேர்தலானது ஜனநாயகமாக நடைபெறுமா என்ற கேள்வி உள்ளது.ஏனெனில் கருத்து சுதந்திரம் வெளியிட முடியாத வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. தேர்தல் காலங்களில் மக்களுக்கு தமது கருத்துக்களைப் பகிர அரசியல் கட்சிகளுக்குச் சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டும்.

நடைபெறவுள்ள தேர்தல் ஜனநாயக ரீதியாக நடைபெறுகின்றதா என்பதை உறுதிப்படுத்த சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும் எனவே அரசு இவை தொடர்பில் ஆராய்ந்து மக்கள் நலனை முன்னிறுத்தி முதலில் செயற்பட வேண்டும்.

நாட்டில் பல மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்த ஊரடங்கு சட்டங்கள் தளர்த்தப்பட்டு உள்ளன. தளர்த்தப்படும் இடங்களில் அச்சுறுத்தல் ஏற்படாதா, மக்களுக்கு மீண்டும் தாக்கங்களைச் செலுத்தாதா, அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்து உள்ளதா என்பவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சுகாதாரத் துறையினரின் கருத்தை இலங்கை அரசு கேட்டு செயற்பட வேண்டும். அதனை விடுத்து தேர்தலை எவ்வாறாயினும் நடத்திவிட வேண்டும் என்ற நோக்கில் செயற்படக் கூடாது.

கோட்டாபய அரசு இரண்டு காரணிகளை வைத்தே எப்படியும் தேர்தலை நடத்த வேண்டும் என்று விடாப்பிடியாக உள்ளனர். அதில் ஒன்று ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிரிந்துள்ளனர்.

அவர்களின் பிளவுகளைச் சாதகமாக்கி வாக்கினை அதிகமாகப் பெற முடியும். மற்றையது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தை அரசு வெற்றிகரமான முறையில் கட்டுப்படுத்தினோம் என்ற பிரச்சாரம் போன்றவற்றை கருத்தில் கொண்டே அரசு தேர்தலில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது – என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசு ஊரடங்கைத் தளர்த்தினாலும் நமக்கு நாமே அதனை விதிப்போம்!

பலரும் எதிர்பாராத வகையில் ஊரடங்கை நீக்கியிருக்கின்றது அரசு.

வடக்கில் உரிய அதிகாரிகளிடமிருந்து சென்ற பரிந்துரைகளைக் கூட ஊதாசீனம் செய்து விட்டுத் தன்பாட்டில் தனது தீர்மானத்தை எடுத்து அறிவித்திருக்கின்றது அதிகாரத் தரப்பு என்ற தகவல் கசிந்திருக்கின்றது.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் வடக்கே வந்திருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இங்கு ஊரடங்கு இப்போதைக்கு நீக்கப்படமாட்டாது என்று கோடிகாட்டிச் சென்றிருந்தார்.

அது பற்றிய செய்திகளை மக்கள் வாசித்துக் கேட்டறிந்து விடயங்களை உள்வாங்குவதற்கு உள்ளாகவே வடக்கு உட்பட இலங்கையின் பெரும்பாலான பாகங்களில் ஊரடங்கு நீக்கப்படுவதான செய்தி வெளியாகிவிட்டது.

அரசாங்கத்தின் இந்த அறிவிப்புத் தொடர்பான உள்நோக்கம் யாது என்பது வெளிப்படையானது.

கொரோனாத் தொற்றில் இருந்து நாட்டையும் மக்களையும் காப்பதிலும் விட தன்னுடைய அரசியல் எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்வதே ஆளும் தரப்பில் பிரதான - முக்கியமான - விடயமாக உள்ளது.

அதிகாரப் பசியில் துடிக்கும் ஆட்சிப்பீடம் அதனை எட்டுவதற்கு எத்தகைய வழியையும் - எந்த விதமான தீர்மானத்தையும் - எடுக்கப் பின்நிற்காது என்பது இந்த ஊரடங்கு நீக்க அறிவிப்பு மூலம் அம்பலமாகி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விடயத்திலும் தனது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கே அரசு முன்னுரிமை கொடுத்துச் செயற்படும் என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

அதிகாரத் தரப்பின் இந்தத் தீர்மானத்தினால் ஏற்படப் போகும் விளைவு ஆபத்தானால் அதை எதிர்கொள்ளப் போகின்றவர்கள் மக்கள்தான்.

அதுவும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பின்புலத்தில் ஊரடங்கை நீக்கும் அவசரக்குடுக்கை முடிவு பெரும் பாதகமான விளைவுகளைத் தந்துவிடலாம்.

அடங்கிக் கொண்டிருக்கும் வைரஸ் பரவல் முற்றாக ஒழிய முன்னர் அது மீண்டும் புனர்ஜென்மம் எடுத்துப் பரப்புவதற்கு இடமளிப்போமேயானால், அதன் மீளெழுச்சி மிக ஆபத்தானதாக - மோசமானதாக - இருக்கும் என்கின்றனர் நிபுணர்கள்.

அத்தகைய சூழல் ஏற்பட்டால் தடுப்பு முயற்சிகளை மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தொடங்குவது என்பது இலகுவில் சாத்தியப்படப் போவதில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆகவே வடக்கைப் பொறுத்தவரை - குடாநாட்டைப் பொறுத்தவரையில் - அரசும் அதன் கட்டமைப்பும் அதிகார வர்க்கமும் என்ன முடிவு எடுத்தாலும் - எத்தகைய மொத்தனப் போக்கில் நடந்து கொண்டாலும் - நமக்குரிய பாதுகாப்பை நாமே தேடிக் கொள்வதுதான் உசிதமானது.

அரசின் ஊரடங்கை நம்பியிராமல், அந்த ஊரடங்கினால் எதைச் செய்ய - எதை நிறைவேற்ற - விழைந்தார்களோ அதை நாங்களாகவே தேடி நடைமுறைப்படுத்திக் கொள்வதுதான் சிறந்ததாகும்.

அரசு ஊரடங்கைத் தளர்த்தி விட்டது என்பதற்காக அதை நம்பி, நாங்கள் எல்லோரும் பழைய சமூக ஒன்றுகூடல் பாணியைப் பின்பற்றுவோமானால் அது மிக மோசமான விளைவையே கொண்டு வந்து தரும்.

ஊரடங்கு நீக்கம், அரசு தனது அரசியல் இலக்குகளை எட்டுவதற்கான சூழ்ச்சி என்பதை உணர்ந்து - புரிந்து - கொள்வோமேயானால், இந்த விவகாரத்தில் நாம் என்ன செய்யலாம் என்பது நமக்கே புரிந்து விடும்.

இந்த ஊரடங்குத் தளர்வு எமக்கான - எமது சமுதாயத்துக்கான - பொறி என்பதை உணர்ந்துகொண்டு, அதனடிப்படையில் நாம் ஒவ்வொருவரும் எச்சரிக்கையாக செயற்பட வேண்டும்.

அது மட்டுமல்ல, இந்தப் பொறியின் சூட்சுமத்தை உணர்ந்து கொண்டு அதை மற்றவர்களுக்கும் விளக்கி, புரிய வைத்து, ஒட்டுமொத்த சமுதாயத்தையும் எச்சரிக்கையுணர்வோடு விடயங்களைக் கையாளத் தூண்ட வேண்டும்.

தமது அரசியல் இலக்குக்காக அரசுத்தரப்பு ஊரடங்கைத் தளர்த்தினாலும் அந்த உபாயத்துக்கு எடுபடக்கூடிய அறிவற்றவர்கள் அல்லர் யாழ்ப்பாணத்துச் சமூகத்தவர்கள் என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் எச்சரிக்கையுணர்வோடு நாம் நடந்து கொள்ளவேண்டும்.

எமக்கு நாமே ஊரடங்கு விதித்துக் கொள்வதுதான் இன்றைய நிலையில் நமக்கும் பாதுகாப்பு; நமது சமூகத்துக்கும் பாதுகாப்பு.

# எங்களின் வளங்களைப் பயன்படுத்தி வளமான எதிர்காலம் அமைப்போம்

## சிவசக்தி ஆனந்தன் அழைப்பு



வவுனியா, ஏப். 19

தாயகத்தில் தனித்துவமாக உள்ள வளங்களை பயன்படுத்தி எமக்கான வளமான எதிர்காலத்தை அமைத்துக்கொள்வதற்கு அனைத்து தரப்பினரும் பேதமின்றி திடசங்கற்படம் பூண வேண்டும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

கொரோனா வைரஸ் பரவலின் தாக்கம் உலகளாவிய ரீதியில் தீவிரமாகியுள்ள நிலையில் அதன் பாதிப்புக்கள் இலங்கையிலும் ஏற்பட்டுள்ளது.

ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் கொரோனா தொற்றாளர்களும், மரணங்களும் இலங்கையில் குறைவாக இருந்தாலும் அதனால் நாட்டின் ஒட்டுமொத்தமான நிலைமையும் தலைகீழாக மாறியுள்ளது.

சுகாதாரப் பிரிவினரின் தகவல்களின் பிரகாரம் எதிர்வரும் நாட்களில் நாட்டில் ஓரளவு நிலைமைகள் வழமைக்கு திரும்பினாலும், அன்றாட வாழ்வாதாரத்தை நகர்த்திச் செல்வதில் பெரும் நெருக்கடியான நிலைமைகள் ஏற்படப்போகின்றமையை தவிர்க்க முடியாதவொரு சூழல் எழுந்துள்ளது.

போரின் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் எமது மக்களை மாறிமாறி ஆட்சிப்பீடத்தில் இருந்த அரசுகள் மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே நடத்தி வந்திருந்தன என்பதை வெளிப்படையான விடயமாகின்றது.

எமது மக்களுக்கான நலத்திட்டங்கள் அனைத்துமே கண்துடைப்பான நாடகங்களாகவே இருக்கையில் எமது மக்கள் தமது சொந்த முயற்சியில் வாழ்வியலில் மீண்டெழ ஆரம்பித்திருந்தனர்.

அவ்வாறான நிலையில் உலகளாவிய தொற்றுநோயான கொரோனா மீண்டெழ ஆரம்பித்திருந்த எமது மக்களின் ஒட்டுமொத்தவாழ்க்கையையும்புரட்டிப்போட்டுள்ளது.

திறந்தபொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் அரசாங்கம் பின்பற்றிய இறக்குமதிகளை மட்டுமே மையப்படுத்திய பொருளாதாரத்தினால்; தற்போது பெரும் நெருக்கடிகள் எழுந்துள்ளதோடுசவால்கள்நிறைந்தஎதிர்காலமொன்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தாயக பூமி, காடுகளையும், களனிகளையும், நீர்நிலைகள் உள்ளிட்ட வளங்கள் நிறைந்தவையாக இருக்கின்றது.

இதனை நாம் அனைவரும் முதலில் மனதில் திடமாக நிறுத்திக்கொள்வதோடு உடனடியாக எமது வளங்களை மையப்படுத்தி எதிர்காலத்தினை திட்டமிடவேண்டிய கடப்பாட்டுக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

குறிப்பாக எமது பிரதேசத்தின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக 'சுயதேவை பொருளாதார' கொள்கைகளை மையப்படுத்திய திட்டங்களை உடன் பின்பற்றுவதே எமக்கும் எதிர்காலச் சந்ததியினரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக இருக்கும்.

விசேடமாக, நெல் உற்பத்தி, மரக்கறி உற்பத்தி, நன்னீர், கடல் நீர் மீன்பிடி ஆகியவற்றை ஊக்குவிப்பது இன்றியமையாததாகின்றது.

அதுமட்டுமன்றி, அனைத்து தரப்பினரும் தமது வீடுகளில் வீட்டுத்தோட்டங்களை முன்னெடுப்பதும் அவசியமானதொரு செயற்பாடாகின்றது.

ஆகவேஎமதுமண்ணில்உள்ளவளங்களை சரியாக புரிந்து முறையாக பகிர்ந்து செயற்படுவதன் ஊடாக நாம் ஆட்சியாளர்களிடமோ, பிற தரப்பினர்களிடமோ தங்கி வாழும் சூழலிலிருந்து முற்றாக விடுபடுவதற்கான வழியை ஏற்படுத்துகின்றது.

கொரோனாவினால் ஏற்பட்டுள்ள சவால்களுக்கு முகங்கொடுக்கும் முகமாகவும் எமது எதிர்காலத்தினை நாமே வளமானதாக வகுத்துக்கொள்வதற்காகவும் தற்போதே தீர்க்கமாக முடிவெடுத்து நடைமுறைச்சாத்தியமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது கட்டாயமாகின்றது - என்றார்.

# பூபதித் தாய்க்கு இன்று வவுனியாவில் அஞ்சலி



பூபதித்தாயின் நினைவுநாள் இன்று வவுனியாவில் இடம்பெற்றது.

அன்னை பூபதியின் 32ஆம் ஆண்டு நினைவுநாள் இன்றாகும்.

1988ஆம் ஆண்டு மார்ச் 19 முதல் ஏப்ரல் 19 வரை ஒரு மாத காலமாக சாகும் வரையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தை நிகழ்த்தி உயிர்நீத்த அன்னை பூபதியின் நினைவு நாளை, இன்று உலகெங்குமுள்ள தமிழர்கள் நினைவு கூர்கிறார்கள்.

வவுனியாவில் ஆயிரத்து நூற்று ஐம்பது நாட்கள் கடந்தும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை, தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினர் நடத்தி வருகின்றனர்.

ஏ9 வீதிக்கு அருகே அமையப்பெற்றுள்ள தமது போராட்டப் பந்தலில் இன்று 19.04.2020 ஞாயிற்றுக்கிழமை 1157 ஆவது போராட்ட நாளில், பூபதித் தாயின் உருவப்படத்தை காட்சிப்படுத்தி மெழுகுவர்த்திகள் ஏற்றி மலர் தூவி, தமிழர் தாயக சங்கத்தினர் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

ஒட்டுமொத்த தமிழினமே நிரந்தரமான, பாதுகாப்பான, சுதந்திரத்தை, இதயபூர்வமாக நேசித்தார்கள் என்பதன் வரலாற்று அடையாளம் தான் தமிழினத்தாய் பூபதி அம்மா ஆவார்' என்று தமிழர் தாயக சங்கத்தின் செயலாளரும், வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவருமாகிய கோ.ராஜ்குமார் தெரிவித்தார்.



# அச்சம்கொள்ளத் தேவையில்லை மக்களுக்கு மோடி அறிவுறுத்தல்!

கொரோனா பாதிப்பு குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று பிரதமர் மோடி தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் உணவு தானியங்கள் போதுமான அளவு வழங்கப்படும் என்று பொதுமக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

மத்திய உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வானின் டுவிட்டை பகிர்ந்து கொண்ட பிரதமர், தனது டுவிட்டரில், பொதுமக்கள் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.



தயவு செய்து உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்போம். ஒன்றாக இருந்து கொரோனா தொற்றை தோற்கடிப்போம் என்று பதிவிட்டுள்ளார்.

## கொரோனாவின் மத்தியிலும் ஒளிர்ந்தது செங்கோட்டை!

### பாரம்பரியத் தினத்தையொட்டி

*கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் உலக பாரம்பரிய தினமான சனிக்கிழமை இரவு இந்தியத் தலைநகர் டெல்லியில் உள்ள செங்கோட்டைக்கு தொல்லியல்துறை விளக்குகளால் அலங்கரித்து ஒளியூட்டியது..*

*உலகில் ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு இனமும் தத்தமது பாரம்பரியப் பெருமைகளை காப்பதற்காக ஏப்ரல் 18ஆம் திகதி உலகப் பாரம்பரிய தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்தத் தினம் மக்களிடையே தங்களது சமூக கலாசார பாரம்பரியத்தைக் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் கொண்டாடப்பட்டு வருகிறது. இது மேலும் பாரம்பரிய பெருமை கொண்ட இடங்களைப் பாதுகாக்கவும் அவற்றின் மீது அக்கறை கொள்ளவும் தூண்டுகிறது.*

*இந்த நிலையில், உலக பாரம்பரிய தினத்தை முன்னிட்டு தலைநகர் டெல்லியில் உள்ள செங்கோட்டை முன்பு தொல்லியல் துறை விளக்குகளால் அலங்கரித்தது.*

## இந்தியாவில் உயிரிழப்பு 500ஐத் தாண்டி நகர்கிறது

### 16 பேருக்குத் தொற்று

இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 16 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 500ஐ எட்டியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தியா முழுவதும் மே 3ஆம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டு உள்ளது. ஆனாலும், கொரோனா தொற்று அறிகுறியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு அடுத்தடுத்து நோய்த்தொற்று உறுதி செய்யப்படுவதால் கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்ந்த அதிகரித்துக் கொண்டே வருகிறது.

தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை இன்று மதியம் வரை 16 ஆயிரத்து 365 ஆக அதிகரித்துள்ளது என மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போதைய நிலவரப்படி 15 ஆயிரத்து 365 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 2 ஆயிரத்து 230 ஆக உள்ளது. அதேபோல், கொரோனா பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 521 ஆக உயர்ந்துள்ளது – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உணவு, தண்ணீரின்றி பறவைகள் விலங்குகள் உயிரிழக்கின்றன!



கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் விதமாக இந்தியா முழுவதும் மார்ச் 25 முதல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் நகரங்களில் உள்ள பறவைகள், தெருவோர விலங்குகள் உணவு மற்றும் தண்ணீர் இன்றி இறந்து வருகின்றன என்று தன்னார்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

நாடு முழுவதும் ஊரடங்கு காரணமாக உணவகங்கள், மீன், இறைச்சி, பலசரக்குக் கடைகள் என அனைத்து வகை கடைகளும் செயல்பட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், மக்கள் வீடுகளிலேயே இருக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் பறவைகளும், விலங்குகளும் உணவின்றிக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. நகரங்களில் உள்ள மரங்களில் கூடுகள் அமைத்து வாழும் பறவைகள் பெரும்பாலும் மனிதர்களால் கிடைக்கும் உணவுகள் மற்றும் தண்ணீரை நம்பியே உள்ளன. அதுபோன்றே தெருவோரங்களில் வாழும் விலங்களின் நிலையும்.

தற்போது ஊரடங்கு காரணமாக கடைகள் அடைக்கப்பட்டு மக்கள் வெளியே நடமாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால் பறவைகளும், விலங்குகளும் தண்ணீர், உணவின்றி உயிரிழந்து வருகின்றன என்கிறார்கள் தன்னார்வலர்கள்.

கர்நாடக மாநிலம் மங்களூரில் உள்ள பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக தண்ணீர் மற்றும் உணவின்றி காகங்கள், புறாக்கள் உள்ளிட்ட பல பறவைகள் சாலையில் உயிரிழந்து கிடப்பதைப் பார்க்க முடிவதாக அவர்கள் கூறுகின்றனர்.

# இலவச அரிசியைப் பெற வரிசையில் காத்திருந்த பெண்ணுக்கு மாரடைப்பு!

### அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்து இறந்தார்

உத்தரபிரதேசத்தில் பங்கீட்டுப் பொருள்கள் விநியோகிக்கும் கடையில் இலவச அரிசி வாங்க காத்திருந்த பெண் மாரடைப்பால் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் மார்ச் 25ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு மே 3ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதால் ஏழைக் குடும்பங்கள் பெரும் பாதிப்படைந்துள்ளன. இதனைச் சமாளிக்க மாநில அரசுகள் உதவிப் பொருள்களை வழங்கி வருகின்றன.

ஊரடங்கு காலத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தேவையான அரிசி, கோதுமை உள்ளிட்ட பல்வேறு உணவு தானிய பொருட்கள் பொதுவிநியோக திட்டத்தின் கீழ் மாநில அரசுகள் இலவசமாக வழங்கி வருகிறது.

போதிய வருமானம் இல்லாமல் உணவுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்ற சூழ்நிலை நிலவி வருவதால் ரேன் கடைகளில் கிடைக்கும் அரிசி உள்ளிட்ட பொருட்களை வாங்க மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

உத்தரபிரதேச மாநிலம் பாடன் மாவட்டம் பிரகலாத்பூர் என்ற கிராமத்தை சேர்ந்தவரான மைகு அலியின் மனைவி மீம்பனோ (வயது 35) பங்கீட்டுப் பொருள்களைப் பெறுவதற்காக வரிசையில் காத்திருந்த போது மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த இவர்களது குடும்பம் ஊரடங்கு காலத்தில் அம்மாநில அரசு வழங்கும் இலவச அரிசியை நம்பியே இருந்தது.

வெள்ளிக்கிழமை இலவச அரிசி உள்ளிட்ட உணவு தானியங்கள் வழங்கப்பட உள்ளது என்ற தகவலையடுத்து மீம் தனது கிராமத்திற்கு அருகே உள்ள கடைக்கு நடந்தே சென்றுள்ளார்.

சுமார் 3 மணி நேரம் நடந்து சென்று கடையை அடைந்த அவர் கூட்டம் காரணமாக தானியங்களை வாங்க நீண்ட வரிசையில் காத்து கிடந்தார். கடுமையான வெளியில் மூன்று மணி நேரம் நடந்து பின்னரும் வெயிலில் வரிசையில் நின்று கொண்டிருந்த மீம் திடீரென நிலை குலைந்து கீழே விழுந்தார்.

அங்கிருந்தவர்கள் உடனடியாக அவரை அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு மீமை பரிசோதனை செய்த மருத்துவர் அவர் மாரடைப்பால் ஏற்



கனவே உயிரிழந்துவிட்டதாக அதிர்ச்சி தரும் தகவலைத் தெரிவித்தார்.

குடும்ப சூழ்நிலை காரணமாக அரசு வழங்கும் இலவச அரிசியை வாங்க காத்திருந்த பெண் வரிசையில் நின்று கொண்டிருந்த போது மாரடைப்பால் உயிரிழந்த சம்பவம் உத்தரபிரதேசத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## பிறந்து 8 நாளேயான குழந்தைக்கு கொரோனா

*மராட்டிய மாநிலம் பால்கர் மாவட்டம் வசாய் வீரார் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பிறந்து 8 தினங்களேயான குழந்தை கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளது.*

*அதேசமயம் அந்த குழந்தையின் தாயார் இந்த வைரசால் பாதிக்கப்படவில்லை.*

*குழந்தையின் உடல் நலம் குறித்து பரிசோதனை செய்யப்பட்டபோது நோய் தொற்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.*

*இந்தியாவில் அதிகபட்சமாக மராட்டிய மாநிலத்தில்தான் 3648 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

# கொரோனா தொற்றாளர்களைவிட வேலையற்றோர் தொகை அதிகம்!

## சுவிட்சர்லாந்தில் இந்த நிலமை



சுவிட்சர்லாந்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களைவிட, கடந்த 30 நாள்களில் வேலையிழந்தவர்கள் மற்றும் வேலைநேரக் குறைப்பால் தங்கள் வருவாயை இழந்தவர்களின் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்திருப்பது தெரியவந்திருக்கிறது.

சுவிட்சர்லாந்தில் கொரோனா முடக்கத்திலிருந்து நாட்டை விடுவிக்கும் மூன்று கட்ட செயல் திட்டம் குறித்து அரசு வெள்ளிக்கிழமை அறிவித்தது. அதைத் தொடர்ந்து, சனிக்கிழமை பிற்பகலில் நாட்டின் தலைநகரான பேர்னில் அரசு சார்பில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதில் சுவிஸின் பொதுச் சுதாதரத் துறையான 'ஃபொப்'ன் தலைமைப் பிரதிநிதி டேனியல் கோச், மற்றும் தொழிலாளர் இயக்குநரகமான 'செகோ'ன் தலைவர் போரிஸ் ஸுர்ச்சர் ஆகிய இருவரும் முக்கிய பிரதிநிதிகளுடன் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

பத்திரிகையாளர்கள் மத்தியில் டேனியல் கோச் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது மொத்தம் 27 ஆயிரத்து 78 பேருக்குக் கொரோனா தொற்று உள்ள நிலையில், ஆயிரத்து 327 பேர் உயிரிழந்துள்ளனர். இறப்புகள் குறையத் தொடங்கியுள்ள அதேநேரம், தொற்று விகிதம் கணிசமாகச் சரிந்து வருகிறது.

இதை வைத்து சுவிஸுக்கு ஆபத்து நீங்கிவிட்டது என்று சொல்லிவிடமுடியாது. நோய் எதிர்ப்பு சக்தி மிக்க இளைஞர்களும் இங்கே தொற்றுக்கு ஆளாவது இந்த வைரஸின் தீவிர ஆற்றலை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. அதனால்தான் மக்களிடம் முழுமையான ஒத்துழைப்பைக் கேட்டோம்.

பத்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர் கொரோனாவைக் காவுபவர்கள் அல்லர்; அவர்களில் பெரும்பாலானவர்கள் நோய்த்தொற்றுக்கு ஆளாக மாட்டார்கள், எனவே தொடக்கப் பள்ளிகளை விரைவாக மீண்டும் திறப்பது பற்றிய முடிவை விரைவில் அறிவிப்போம்" - என்றார்.

அடுத்துப் பேசிய 'செகொ'வின் தலைவர் போரிஸ் ஸுர்ச்சர் தெரிவித்ததாவது:-

"வேலை நேரத்தை அதிரடியாகக் குறைத்தது மற்றும் பணியிலிருந்து நிரந்தமாக விடுவித்தது ஆகிய காரணங்களால் வேலையின்மையும் வேலையிழந்தவர்களின் எண்ணிக்கையும் நாட்டில் வேகமாக அதிகரித்து வருகிறது, மார்ச் 15 தொடங்கி தற்போதுவரை வேலையற்றோர் மற்றும் வேலையிழந்தோர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 51 ஆயிரமாக அதிகரித்துள்ளது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 33 ஆயிரம் பேர் வேலையிழந்துள்ளனர். அதை அரசுக்கு முறையாகத் தெரிவித்திருக்கிறார்கள்" - என்றார்.

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களைவிட வேலையிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது சுவிட்சர்லாந்து போன்ற வளர்ந்த நாடுகளுக்கு இனிவரும் நாட்கள் எவ்வளவு சவாலாக இருக்கப்போகிறது என்பதற்கான அறிகுறி என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

# 23 லட்சத்தைக் கடந்தது தொற்றாளர்கள் தொகை



உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 23 லட்சத்தை கடந்து 23 லட்சத்து 33 ஆயிரத்து 240ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 6 லட்சம் பேர் தொற்று நீங்கி குணமடைந்தனர். ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 818 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் வுகான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் 210 நாடுகள் மற்றும் தன்னாட்சி நிலங்களில் பரவி பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் வைரஸ் தாக்குதலின் தன்மை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

வைரஸ் பரவியவர்களில் 15 லட்சத்து 72 ஆயிரத்து 100 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 55 ஆயிரத்து 271 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

அமெரிக்காவே பாதிப்பில் முதலிடத்தில் உள்ளது. அங்கு மட்டும் 7 லட்சத்து 39 ஆயிரம் பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. அவர்களில் 68 ஆயிரத்து 285 பேர் மட்டுமே குணமடைந்துள்ளனர். 39 ஆயிரத்து 15 பேர் உயிரிழந்துள்ளனர். எந்தவொரு நாட்டிலும் ஏற்பட்ட பாதிப்பை விட இது பல மடங்குகள் அதிகம்.

ஒட்டுமொத்தமாக ஐரோப்பிய நாடுகளில் பாதிப்பு மிக அதிகமாக உள்ளது. 10 லட்சத்து 60 ஆயிரம் பேர் அங்கு பாதிக்கப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர் உயிரிழுந்துள்ளனர். 3 லட்சம் பேர் குணமடைந்துள்ளனர்.

இத்தாலியில் 23 ஆயிரத்து 227 பேரும் ஸ்பெயினில் 20 ஆயிரத்து 639 பேரும் பிரான்ஸில் 19 ஆயிரத்து 323 பேரும் இங்கிலாந்தில் 15 ஆயிரத்து 464 பேரும் பெல்ஜியத்தில் 5 ஆயிரத்து 483 பேரும் உயிரிழந்துள்ளனர்.

# 40 ஆயிரத்தை எட்டுகின்றது அமெரிக்காவில் உயிரிழப்பு

அமெரிக்காவில் கொரோனா தாக்குதலுக்கு நேற்று ஒரே நாளில் ஆயிரத்து 867 பேர் உயிரிழந்தனர். இதனால் அங்கு வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 39 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் இதுவரை 23 லட்சத்து 33 ஆயிரத்து 100 பேருக்கு பரவியுள்ளது.

வைரஸ் பரவியவர்களில் 15 லட்சத்து 73 ஆயிரத்து 25 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 55 ஆயிரத்து 265 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

மேலும், வைரஸ் பரவியவர்களில் இதுவரை 6 லட்சத்து 323 பேர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்..

ஆனால், இந்த கொடிய கொரோனாவுக்கு உலகம் முழுவதும் இன்று மதியம் வரை ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 818 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையில், சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் கொரோனா வைரஸ் தற்போது அமெரிக்காவைப் புரட்டி எடுத்து வருகிறது. உலக அளவில் வைரசால் பாதிப்பு மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில், கொரோனா தாக்குதலுக்கு அந்நாட்டில் உயிரிழந;தவர்கள் எண்ணிக்கை 39 ஆயிரத்தை கடந்துள்ளது.

தற்போதைய நிலவரப்படி அமெரிக்காவில் 7 லட்சத்து 38 ஆயிரத்து 792 பேருக்கு வைரஸ் பரவியுள்ளது. குறிப்பாக நேற்று ஒரே நாளில் புதிதாக 29 ஆயிரத்து 57 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று ஒரே நாளில் ஆயிரத்து 867 பேர் உயிரிழந்தனர். இதனால் அமெரிக்காவில் கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 39 ஆயிரத்து 16ஆக அதிகரித்துள்ளது.

அமெரிக்காவில் இந்த கொடிய வைரஸ் பரவியவர்களில் இதுவரை 68 ஆயிரத்து 269 பேர் குணமடைந்துள்ளனர்..

# ஸ்பெயினில் ஊரடங்கு மே 9 வரை நீடிப்பு!

கொரோனா வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள ஸ்பெயினில் ஊரடங்கு உத்தரவு மே 9ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
சீனாவின் வுஹான் நகரில் உருவான கொரோனா வைரஸ், உலகில் உள்ள 210 நாடுகள் மற்றும் தன்னாட்சி நிலங்களில் பரவிப் பேரிழப்பை ஏற்படுத்தி வருகிறது.
கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்தக் கொடிய வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.
கொரோனா வைரஸின் தாக்கத்தில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அதைத்தொடர்ந்து ஸ்பெயினும் இத்தாலியும் இருந்து வருகின்றன.
இந்த நிலையில், கொரோனா வைரசால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள ஸ்பெயினில் ஊரடங்கு உத்தரவு மே 9ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், அதைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு மே 9ஆம் திகதி வரை நீட்டிக்கப்படுகிறது என ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்ஷே தெரிவித்துள்ளார்.
ஸ்பெயினில் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 20 ஆயிரத்து 639 ஆக உயர்ந்துள்ளது.
பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 94 ஆயிரம்.
அவர்களில் 74 ஆயிரத்து 796 பேர் தொற்று நீங்கி குணமாகியுள்ளனர்.



# மனிதனின் முடக்கம்; இயற்கையின் மகிழ்ச்சி!

உலகம் ஒரு கிராமம் ஆகிவிட்டது என்று மார் தட்டிக் கொண்டோம். தற்போது ஒவ்வொரு கிராமமும் ஓர் உலகமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. உலகமயமாக்கல், பொருளாதாரப் பெருக்கத்தை ஏற்படுத்தும், உலக மக்களை ஒருங்கிணைக்கும் என்றெல்லாம் நம்பி வியாபார உத்திகளுக்கு ஆட்பட்டு மனிதன் தன்வயம் இழந்து முற்றிலும் தன்னையும் வியாபாரப் பொருளாக்கிக் கொண்டான். கிடைத்ததையெல்லாம் விற்றுத் தீர்த்துவிடும் மனநிலையும், பார்த்ததை எல்லாம் அனுபவித்து விட வேண்டுமென்ற பேராசையும் அவனுள் குடிகொள்ளத் தொடங்கின.

உலகமயமாக்கல் எனும் சிந்தனை தோன்றிய பிறகுதான் உலகின் எந்த மூலையில் இருக்கும் வியமும் பொருளும் நமது கைகளுக்கு வந்து சேர்வது சுலபமாக்கப்பட்டது. அதைக் கொண்டு மனிதன் பல சொகுசான வசதிகளோடு வாழத் தொடங்கியதும் உண்மை.

அவனுள் இருந்த நுகர்வுப் பேராசை இயற்கையை அழித்துவிட்டு அதனையும் தனது செல்வம் ஆக்கிக் கொள்ள, வங்கிக் கணக்கில் இருப்பு வைத்துக்கொள்ள வழிப்படுத்தியது. உலகின் எந்த மூலையில் எந்த நிறுவனம் தயாரித்த வாகனத்தையும் எந்த நாட்டிலும் ஓட்ட முடியும். உலக நாடுகளில் எங்கு எந்த மனிதன் உண்ணும் உணவும் எந்த நாட்டிலும் கிடைப்பது சாத்தியம். ஆஸ்திரேலியாவில் விளையும் பழங்கள் ஆண்டிபட்டியில் கிடைக்கும் என்ற நிலை, இவையெல்லாம் மனிதன் இந்த உலகையே வென்று விட்டதாக ஒரு பிரமையை ஏற்படுத்தி இருந்தது. விளைந்த தானியங்களும் காய்கறி வகைகளும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும்சந்தைப் படுத்தப்படுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

இதனால் வான்வழிப் போக்குவரத்தும், நீர்வழிப் போக்குவரத்தும் நாளுக்குநாள்பெருகின. பாதசாரிகள் காணாமல் போனார்கள். இரு சக்கர வாகனங்களும் சொகுசுக் கார்களும் அந்த சாலைகளை நிறைத்தன. உலகின் அனைத்துப் பகுதிகளிலும் அனைத்து மக்களுக்கும் என்பதால் என்ன சாத்தியமாயிற்று என்ற கேள்விக்கு விடை, சோகம்தான். உலகமயமாக்கல் தத்துவம் உலகை ஆளத் துவங்கினாலும் ஏழைகள் இல்லாத தேசம் எங்கும் இல்லை என்ற நிலையும் தொடாந்து கொண்டுதான் இருந்தது. இப்போதும் தொடாந்து வருகிறது.

உலகம் தனக்கு வயப்பட்டு விட்டதாக இறுமாப்பில் மனிதன் கண்களைத் தொலைத்துவிட்டு சுயநலத்தைப் பொருத்திக் கொண்டான்.


இத்தாலியின் வெனிஸ் கால்வாய்கள்

இந்தப் பூமி உருண்டை பல்லாயிரம் கோடி ஜீவராசிகளின் வாழ்விடம் என்னும் எண்ணம் மறைந்தது. எல்லாம் தனக்காகவே படைக்கப்பட்டது; அவற்றையெல்லாம் தான் அனுபவிப்பதே வாழ்க்கை என்ற புதிய விதியை சுயநலமிக்க மனதில் உருவாக்கிக் கொண்டான்.

உலகம் முழுவதும் நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினங்களை சற்றும் மரியாதை இன்றி அழித்து ஒழித்தான். நெகிழிக் கழிவுகளால் கடலை அசுத்தப் படுத்தினான். பூமியை மலடாக்கினான். இயற்கையின் வரப்பிரசாதமாக, நமக்கு உயிர்தரும் பிராண சக்தியாக விளங்கும் வனங்களையும் அழித்துவிட்டு சாலைகளும்சொகுசுமாளிகைகளும்உருவாக்கினான். அங்கே வாழ்ந்த வனவிலங்குகளைத் துன்புறுத்த மின்சார வேலிகள் அமைத்து அவற்றைக் கொன்று தீர்த்தான். புலி, சிங்கம் போன்ற வன விலங்குகள் அழிவை நோக்கி நகாந்தன.

பல விதமாக நிலத்தையும் நீரையும் மாசுபடுத்தி ஆயிற்று. அதிலே வாழ்ந்த உயிரினங்களைக் கொன்று குவித்தாயிற்று. ஆசை அடங்கி விடவில்லை. இன்னும் இன்னும் பொங்கிப் பெருகத்தான் செய்தது. போக்குவரத்தைத் தாண்டி தொடர்பு சாதனங்கள் அவனுக்குத் தேவைப்பட ஆரம்பித்தன. தொடர்புச் சாதனங்களுக்காக இணையதளம், செல்லிடப்பேசி ஆகியவை உருவாக்கப்பட்டன. எல்லாமும் தன் கைக்குள் வந்து விட்டன எனப் பெருமிதத்தில் வாழ்ந்தான்.

தொடாபுச் சாதனங்கள் பெருகின. ஊர்தோறும் செல்போன் கோபுரங்கள் வெளிப்படுத்தும் மின்காந்த கதிர்வீச்சால் பறவைகள் தங்கள் வாழ்வைத் தொலைத்தன. பல்லாயிரம் விருட்சங்களை தன் வாழ்வில் உருவாக்கிய பறவைகள் காணாமல் போயின. இதனால் விளைந்து கொண்டிருக்கும் நஷ்டத்தை எண்ணிப் பார்ப்பதற்கு அவனுக்கு நேரமில்லை. மேலும் மேலும் அச்சடித்த பணம், அதிகார வேட்கை மட்டுமே கண்களுக்குப் புலப்பட்டன. தானே இந்தப் பூமியின் உரிமையாளன் என்று பறைசாற்றிக் கொண்டான்.

உலகமயமாக்கல் கொண்டுவந்து சோத்தவை ஆடம்பரங்கள், வியாபார உத்தி. சுயநலத்தின் போக்கில் ஆடம்பரங்களைச் சேர்க்கத் தொடங்கி செயற்கையை நம்பி, ஆடம்பரமே அத்தியாவசியம் எனும் மாய எண்ணங்களில் நம்மை நாமே சிக்க வைத்துக்கொண்டு வாழ்க்கையையே சிக்கலாக்கிக் கொண்டிருக்கிறோம். உலகமயமாக்கல் வசதிகளை, வாய்ப்புகளை, ஆடம்பரங்களைக் கொண்டு வந்து சேர்த்ததோடு நின்றுவிடவில்லை; உலகம் முழுவதும் நோய்களையும் அது பொதுமைப்படுத்தியது.

வாழ்நாள் நோய்களான சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் போன்ற பல நோய்களையும் உயிர்க் கொல்லி நோயான புற்றுநோய் போன்றவற்றையும் கொண்டுவந்து சேர்த்த போதும் நாம் விழித்துக் கொள்ளவில்லை. தற்போது கொரோனா என்னும் தீநுண்மி நோய்தொற்றுக்கு உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கும் அவல நிலையில் வந்து நிற்கிறோம்.


திருகோணமலையின் நகரின் மத்தியில் சுதந்திரமாய் உலாவரும் கோணேசர் கோட்டை மான்கள்....

தீமைகள் விஸ்வரூபமெடுத்து மனித இனத்தின் முன் நிற்கும் இந்த வேளையில் நாம் என்ன செய்யப்போகிறோம்? செய்வதறியாது மனிதன் தன்னை முடக்கிக் கொண்டுள்ளான். இன்றைக்கு உலகம் முழுவதும் மரண ஓலம் கேட்கிறது. மனிதன் அச்சத்தின் பிடியில் வீடுகளை விட்டு வெளியேறாமல் தனித்திருக்கிறான்.

இந்த நிலையில் உலகம் எப்படி இருக்கிறது? நாடு முழுவதும் மனிதர்களை மட்டுமே ஊரடங்கு முடக்கியிருக்கிறது. விலங்குகள், பறவைகள் சாலைகளிலும் ஊர்ப்புறங்களில் உல்லாசமாய் நடமாடுகின்றன. பறவைகள் புத்தம் புது ஒலியுடன் பறந்து திரிவதை கம்பி சட்டங்களுக்குப் பின்னிருந்து மனிதன் காண வேண்டிய நிலை. நீரிலோ நீர்வாழ் உயிரினங்கள் தம்மை மறந்து நீந்துகின்றன. உலகம் முழுவதும் இத்தகைய செய்திகளைப் பார்க்கிறோம்.

நாம் சாதாரணமாய் கண்டிராத சில அரிய வகை விலங்கினங்களும் சாலைகளில் நடமாடுகின்றன. புனுகுப்பூனை என்று ஒரு விலங்கினம் உண்டு. கேரளத்தில் இந்த புனுகுப்பூனை சாலையில் சுற்றித் திரிந்தது. 1990ஆம் ஆண்டுக்குப் பிறகு தற்போதுதான் இந்த உயிரினத்தை நேரில் காண்பதாக வனத் துறையினர் வியப்பு தெரிவிக்கின்றனர். நம் கண்ணில் படாத அளவுக்கு எங்கோ மூலையில்ஒதுங்கிவாழ்ந்திருக்கின்றன.


காட்டு வான்கோழி படையெடுப்பு குழப்பம், மரின், பே ஏரியாவில் சேதம்

நாடெங்கும் நகர்ப்புறங்களில் மான்கள் சுற்றித் திரிவதாக பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன. உத்தரப் பிரதேசத்தில் காட்டெருமை ஒன்று சாலையோரத்தில் நடைப்பயிற்சி செய்கிறது. கரையோரம்ஒதுங்கும்ஆமைக்கூட்டங்கள் கடற்கரைகளில் ஆசுவாசமாய் நடை பழகுகின்றன. ஒடிஸா கடற்கரையில் லட்சக்கணக்கில் ஆமைகள் தொந்தரவின்றி முட்டையிட்டு குஞ்சு பொரித்துள்ளன. தங்களின் வாழ்விடங்களை அவை மீண்டும் பெற்ற மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றன.

(09 ஆம் பக்கம் பார்க்க)

# சளைக்காமல் கொறனோவோ தன்பாட்டைப் பார்க்கிறது !

பேச்சையும் மூச்சையும் இல்லாமல் செய்ய
பேசாமல் அழையாமல் வந்திருக்கு கொரனோ
ஆட்சியெலாம் இப்போ ஆடியே போச்சு
ஆராய்ச்சி அறிஞர் அலசுகிறார் மருந்தை!

அன்றாடம் உழைக்கிறார் ஆலாய் பறக்கின்றார்
ஆலை முதலாளியெல்லாம் ஆடிப்போய் நிற்கின்றார்
வேலை இழந்தவர்கள் விரக்தியுடன் இருக்கின்றார்
வேடிக்கை பார்த்தபடி கொரனோவோ பாய்கிறது!

கலையுலகம் இப்போ கலங்கிப்போய் இருக்கிறது
நிலைதளர்ந்து கலைஞர் நெடுமூச்சை விடுகின்றார்
விவசாயி நிலையோ வேதனையாய் விரிகிறது
எதையுமே நினையா கொரனோவோ இளிக்கிறது!

பள்ளிப் படிப்போ தள்ளிதள்ளிப் போகிறது
தள்ளிநின்று சொல்லிடுவார் தடுமாற்ற முறுகின்றார்
பிள்ளைளைப் பெற்றவர்கள் பேதலித்து நிற்கின்றார்
பேயான கொரனோவோ பிய்தெறிந்து நிற்கிறது!

ஆகாய விமானம் அமைதியாய் நிற்கிறது
அனைவருமே விமானத்தை அச்சமுடன் நோக்குகிறார்
வெளிநாட்டு வருகையினால் விபரீதம் விளையுமென்று
அரசாங்கம் நினைத்தாலும் அடங்கவில்லை கொரனோவும்!

சட்டங்கள் பலபோட்டும் தடுத்துவிட இயலவில்லை
சனமெல்லாம் இப்போது கிலிக்குள்ளே நிற்கின்றார்
சந்தோம் எனும்வார்த்தை சருகாகிப் போகிறது
சளைக்காமல் கொரனோவோ தன்பாட்டைப் பார்க்கிறது!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, மெல்பேண் - அவுஸ்திரேலியா



தொடர் ஊரடங்கினால் பாதிக்கப்பட்டிருக்கும் மன்னார் மாவட்டத்தைச்சேர்ந்த மக்களுக்கு மன்னார் றோட்டறிக் கழகத்தினால் பல்வேறு உதவித்திட்டங்களை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவதிசையில் மன்னார் நகரப் பிரதேச செயலக பிரிவு, மடு பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மக்களுக்கு உலர் உணவுப்பொதிகள் பிரதேச செயலாளர்களின் வழிநடத்தல்களிக் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இன்று முசலி பிரதேச செயலகத்தினால் முன்மொழியப்பட்ட பயனாளிகள் 60 பேருக்கு உலர்உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் முசலி பிரதேச செயலாளரும் கலந்து கொண்டு தனது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார். கடந்த வாரம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் வினோதனிடம் பொலித்தீனினால் ஆன 150 சுய பாதுகாப்பு அங்கிகள் மன்னர் றோட்டறிக் கழகத்தினால் வழங்கி வைக்கப்பட்டன.






# Free Online Seminar!

## Android App Development for KIDS!

## பாடசாலை மாணவர்களுக்கானது!

**10 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான 2 மணிநேர இலவச செயலமர்வு!**

இந்தியா - தமிழ்நாட்டின் Robatics கற்பித்தலில் புகழ்பெற்ற நிறுவனமான OTOMATIKS நிறுவனத்தினால் நேரடியாக நாடாத்தப்படும் இலவச செயலமர்வு எதிர்வரும் 20ஆம் திகதி மாலை 4 மணிமுதல் 6 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த செயலமர்வில் உங்கள் வீட்டுப் பிள்ளைகளும் கலந்து பயன்பெற விரும்பினால் கீழுள்ள இலக்கத்திற்கு உங்கள் மின்னஞ்சல் முகவரியை What's app செய்யவும்.

(தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்கைநெறிகள் நடைபெறும்.
உலகின் எந்தப் பாகத்தில் இருந்தும் கலந்துகொள்ளலாம்.
முழுமையான இணையவழி கற்கைநெறி 30 மணிநேரம் -
விருப்பம் உள்ளவர்கள் கட்டணம் கட்டி முழுமையான
பயிற்சியை பெற்றுக்கொள்ளலாம் -சான்றிதழ் வழங்கபடும்)

முதலில் பதிவுசெய்யும் 250 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி!

மேலதிக விபரங்களுக்கு: 076 817 0077

அனுசரணை: கற்பகவனம், காலைக்கதிர் பத்திரிகை

# சிகிச்சை பலனின்றி சிறுத்தை உயிரிழப்பு



கொழும்பு, ஏப். 19

மரத்திலிருந்து உயிருடன் மீட்கப்பட்ட சிறுத்தை, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக ரந்தெனிகல மிருக வைத்தியசாலை வைத்தியர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மஸ்கெலியா, காட்மோர் தம்பத்தேன தோட்டத் தேயிலை மலையில், 20அடி உயரமுடைய மரத்தின் உச்சியில் சிறுத்தையொன்று மாட்டிக்கொண்டது.

மிருக வேட்டைக்காக விரிக்கப்பட்ட வலையில் சிக்குண்ட சிறுத்தை, இடுப்புப் பகுதியில் காயம் ஏற்பட்ட நிலையிலேயே வலையிலிருந்து மீண்டு, மரத்தில் ஏறியுள்ளது.

சுமார் எட்டு மணித்தியாலம் கடும் பிரயத்தணத்தின் பின்னர் நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகள், மஸ்கெலியா பொலிஸார், இராணுவத்தின் இணைந்து சிறுத்தையை மீட்டு, ரந்தெனிகல மிருக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

சிறுத்தையின் சிறுநீரகம் பாதிப்டைந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக ரந்தெனிகல வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.



# அன்னை பூபதியை நினைவு கூர்வோம் பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழலில் அன்னை பூபதியின் 32வது நினைவு தினமான இன்று யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நினைவுகூர்ந்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ் மக்களின் விடுதலை யாகம் ஓர் இக்கட்டான காலகட்டத்தை அடைந்தபோது அதனை முன்னகர்த்த அந்த வேள்வித்தீயில் தன்னையும் ஆகுதியாக்கிக் கொண்டவர் அன்னை பூபதியாவார்.

நட்பு முகத்தோடு வந்த இந்திய அரசின் உண்மையான துரோக முகத்தை வெளிப்படுத்திய தியாக தீபம் திலீபனின் வழியில் தன் இன்னுயிரை ஈந்த அன்னை பூபதியை வாஞ்சையோடும் அர்ப்பணிப்போடும் நினைவுகூருவது தமிழ் மக்களின் தார்மீகக் கடமையாகும்.

காந்தீயமும் அகிம்சையும் பேசும் இந்திய அரசின் உண்மையான கோரமுகம் இவர்களின் தியாகத்தால் அம்பலப்படுத்தப்பட்டது.

இந்தியா தமிழ் மக்கள் சார்பாக செயற்படும் என்ற தமிழ் மக்களின் நீடிய எதிர்பார்ப்பின் போலித்தன்மையை தமிழ்மக்கள் உணர்ந்து கொள்ள கிட்டிய ஒரு சந்தர்ப்பமாகவும் இது அமைந்திருந்தது.

இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த 1988ஆம் ஆண்டு காலப்பகுதியில் போரை நிறுத்துங்கள், விடுதலைப்புலிகளோடு பேச்சு நடத்துங்கள் என்ற எளிமையான கோரிக்கைகளோடுதான் அன்னை பூபதியும் அவர் சார்ந்த அன்னையர் முன்னணி அமைப்பினரும் சாத்வீக போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்திய தரப்பினருடனான பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்படாத சூழ்நிலையிலேயே அன்னை பூபதி சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

இந்திய அரசு அவரை சாகவிட்டது. ஆனால் தமிழ் மக்கள் அவரை தமது இதயங்களில் தாங்கிக் கொண்டனர். தமிழ் மக்களின் வீரத்தினதும் தியாகத்தினதும் குறியீடாக என்றும் அன்னை உயர்ந்து நிற்கிறார்.

பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டுள்ள சூழலில் வழமைபோல எமது நினைவுகூரலை செய்ய முடியாத இக்கட்டான நிலையில் நாம் இருந்தாலும் இவ்வறிக்கை மூலம் தமிழ் மக்கள் அனைவருக்கும் அன்னையின் நினைவுகூரலின் அவசியத்தை வலியுறுத்தி நிற்கிறோம். - என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikathir

தாமரைக் குளம்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளை (20/04/2020) தலைப்பு
தாமரைக் குளம்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# உள்ளூர் நகர நடைமுறைகளை பொதுமக்கள் பின்பற்ற வேண்டும்

## வலி. கிழக்குத் தவிசாளர் நிரோஷ் கோரிக்கை



யாழ். மாவட்டத்திலும் ஊரடங்குச் சட்டம் நாளை தளர்த்தப்படவுள்ள நிலையில் உள்ளூர் நகர நடைமுறைகளில் பிரதேச சபை அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஒத்துழைக்குமாறு மக்களை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கேட்டுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்று ஞாயிற்றுக்கிழமை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி இந்துஜன் வைத்திலிங்கத்துடன் தொலைபேசி வாயிலாகவும் அச்சுவேலி பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் பிரதேச சபையில் சந்தித்தும் நாளைய தின ஒழுங்கமைப்புக்கள் பற்றி ஆராய்ந்திருந்தோம்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும் அத்தியவசிய கருமங்களின் அடிப்படையிலான செயற்பாடுகளுக்கே அரசாங்கம் முன்னுரிமையளித்துள்ளது. தொற்று அபாயம் முழுமையாக நீங்கிவிடவில்லை என்ற அடிப்படையில் வலிகாமம் கிழக்கில் அலுவலகங்களுக்கு அல்லது பொது இடங்களுக்கு வருவோர் அவ்வவ் வாயில்களில் கைகளைக் கழுவி விட்டு உள்நுழையவேண்டும். முகக் கவசம் கட்டாயம் அணிந்திருக்கவேண்டும். பிரதேச சபையுடன் தொடர்புபட்ட விடயங்களின் அடிப்படையில் அலுவலக பொதுத் தொலைபேசிப் பரிவர்த்தனையின் பின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அலுவலகத்திற்கு வருவது சிறந்தது.

மேலும் மக்கள் ஒன்றுகூடக்கூடிய சந்தை நடைமுறைகள் இயங்காது. சந்தையில் உற்பத்திகளை விற்றாக வேண்டும் என்ற நிலையில் இருப்போர் அச்சுவேலி - வல்லை வீதியின் இருமருங்கிலும் அங்கு கடைமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தல்கள் ஒழுங்கு படுத்தலுக்கு ஏற்ப உரிய இடைவெளிகளை பேணி வியாபார முயற்சியில் ஈடுபடலாம்.

மக்களை வியாபார நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் அல்லது நடமாடும் வணிக முயற்சிகளில் ஒன்றுகூட்டி செயற்பட முடியாது. மக்களிடத்தில் சுகாதார இடைவெளிகளை பேண வேண்டிய பொறுப்பு வியாபார முயற்சியாளர்களுக்கு உள்ளது. அதனைமீறிச் செயற்படுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். சந்தை வளாகங்களுக்குள் உள்ள பலசரக்குக் கடைகளுக்கு மாத்திரமே சந்தை வளவினுள் செயற்பட அனுமதியுள்ளது.

சந்தைகள் வளாகங்களில் இயங்காதபோதும் வலிகாமம் கிழக்கின்; அச்சுவேலி, உரும்பிராய், கோப்பாய் சந்தைகளை அண்மித்த, ஏனைய பகுதிகளில் சமூக இடைவெளிகள் தேவை என்ற அவசியம் உணரப்பட்டால் ஒலிபெருக்கி அறிவிப்புக்களுக்கு மக்கள் இசைந்து செயற்படவேண்டும்.

சிகை அலங்கார நிலையங்களில் ஒருவர் மாத்திரமே கடைக்குள் அனுமதிக்கப்படமுடியும். மிகவும் சுகாதாரத்திற்குப் பொருத்தமான அணுகுமுறைகள் அங்கு கடைப்பிடிக்கப்படவேண்டும். இல்லையேல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்கனவே எமது சபை திரவ மருந்து விசுறுவதன் ஊடான சுத்தப்படுத்தலை கிரமமாக முன்னெடுத்து வருகின்றது. ஊரடங்கு தளர்த்தப்படும் நிலையிலும் அது தொடர்ச்சியாக தேவைக்கு ஏற்ப விஸ்தரிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும்.

ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்டவாறு நடமாடும் வியாபார முயற்சிகளின் வாயிலாக மீன் மரக்கறி மற்றும் பொருள்களைக் கொள்வனவு செய்வது பொருத்தமானது. அத்துடன் தவிர்க்கமுடியாத பயணங்கள் தவிர்த்து வேறு எதனையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும் நீண்ட நாள்களாக ஊரடங்கு நிலவியமையால் வேடிக்கை பார்ப்பதற்கும் சுற்றித்திரிவதற்கும் யாரும் முயற்சிக்கக் கூடாது

நகர்களுக்குள் மக்கள் கூடாதவாறு அவ்வப்போது தேவைப்பட்டால் வீதிகள் மறிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

# தேர்தல் ஆணையாளர்களின் மீது அரசு அழுத்தங்களைப் பிரயோகிக்க கூடாது

## முன்னாள் எம்.பி. சிவமோகன் கோரிக்கை

**தேர்தல் ஆணையாளர்களின் மீது தற்போதைய அரசாங்கம் அழுத்தங்களை பிரயோகிக்க கூடாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.**

**இன்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-**

வெளிவரும் ஊடக செய்திகளின் அடிப்படையில் தேர்தல் ஆணையாளர் கடுமையான அரசியல் அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளமையை மக்களால் விளங்கிக் கொள்ள கூடியதாக உள்ளது.

தேர்தல் ஆணையாளர் வரப்போகும் அனர்த்தங்களை புரிந்து கொண்டு அரசியல் யாப்புக் குழப்பங்கள் ஏற்படாத வகையில் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையை பெற்றுக் கொள்ளுமாறு அரசுக்கு எழுத்து மூலமான கோரிக்கையை விடுதிருந்தார்.

அதற்கு ஜனாதிபதியின் சார்பாக பதிலளித்த அவரின் செயலாளர் அரசியல் யாப்பு வியாக்கியானங்களை தெரிவித்து தேர்தலை நடத்துவதற்கு உரிய வகையில் எழுத்து மூலமான பதிலை வழங்கியிருந்தார். தற்போதைய அபாய சூழலை புரிந்து கொள்ளாத அரசின் அமைச்சர் உட்பட பலர் தேர்தலை நடத்த முடியும், அதற்கான பொறுப்பு தேர்தல் ஆணையாளரிடமே உள்ளது என அழுத்தங்களை பிரயோகித்து இருந்தனர். நாட்டில் கொரோனா நீங்கி விட்டதை கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கான ஜனாதிபதி செயலணி நாட்டு மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும்.

அதுவே ஒட்டுமொத்த கொரோனா அழிப்பு செயலணியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஜனாதிபதிக்கு பொருத்தமான செயற்பாடாக அமையும் எனவே தற்போதுள்ள சூழல் மிகவும் பயங்கரமான நிலமை என்பதை அரசு அறிந்து கொண்டும் உலக நாடுகளில் ஏற்பட்ட கொரோனா அனர்த்தங்களை விளங்கிக் கொண் டும் செயற்பட வேண்டும். சீன நாட்டில் வுகான் மாநிலத்தில் வைத்தியர்களால் எச்சரிக்கை செய்யப்பட்ட போதும் கூட அதில் அசண்டை ஈனம் காட்டிய சீன அரசு பாரிய பாதிப்பிற்குள்ளாகியது.



இத்தாலிய நட்டில் அரசின் அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்த மக்கள் கொத்துக் கொத்தாக இறக்க நேர்ந்து இறுதியில் மருத்துவ சேவை முழுதும் முடங்கியது. அமெரிக்காவில் 100 பேர் கொரோனாவில் இறந்திருந்த பொழுது ஊடகவியலாளரால் எச்சரிக்கை செய்யபட்டது. அதை உதாசீனம் செய்தார் அமெரிக்க ஜனாதிபதி டரம்ப்.

அதனால் 30ஆயிரத்திற்கு மேல் அமெரிக்க மக்களை பலி கொடுத்து பதிலளிக்க முடியாமல் திண்டாடி வருகிறார்.

இலங்கையில் கொரோனா கோர தாண்டவத்திற்கு எமது மக்களை பலி கொடுக்க மக்கள் பிரதிநிதிகளான நாங்கள் அனுமதிக்க முடியாது.

இறுதியில் இலங்கையில் சுகாதார சேவைகள் முடக்கப்பட்டு கொத்துக் கொத்தாக மக்கள் பலியாகும் நிலை ஏற்பட்டால் அந்த அனர்த்திற்கு காரணம் கூறாமல் முன் எச்சரிக்கையாக இந்த அரசும் தேர்தல் திணைக்களமும் நடந்து கொள்ள வேண்டும். மக்களது சுமுகமான வாழ்க்கை 100 வீதம் வழமைக்குத் திரும்பும் வரை தேர்தலை மக்களுக்குள் திணிக்க கூடாது. – என்றும் தெரிவித்துள்ளார்.

# கொக்கல வர்த்தக வலயத்தில் தொழிற்சாலைகள் இயங்கும்

கொழும்பு, ஏப்.19

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டதையடுத்து, மூடப்பட்ட, கொக்கல சுதந்திர வர்த்தக வலயத்தின் தொழிற்சாலைகளின் நடவடிக்கைகள் நாளை முதல் ஆரம்பிக்கப் படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

20 சதவீத பணியாளர்களுடன் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என முதலீட்டு சபையின் வர்த்தக வலய உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த வலயத்திலுள்ள 2 தொழிற்சாலைகளின் நிர்வாகத்துக்கு, சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் இதேப்போல் ஏனையத் தொழிற்சாலைகளின் பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

# மனிதனின் முடக்கம்

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாகனப் புகையும் தொழிற்சாலை புகையும் இன்றி காற்று மாசு குறைந்துள்ளது. இதனால் தாவரங்களின் வளாச்சி மேம்பட்டுள்ளது. புகையும் தூசும் இல்லாத நிலையில் வானம் தெளிவாய் இருக்கிறது. கூட்டம் கூட்டமாய் வானில் நட்சத்திரங்கள் மிளிர்வதையும் சுடர்வதையும் காண முடிகிறது. நிலவு தெளிவாய்ப் புலப்படுகிறது.

இந்தியாவில் மற்றுமொரு ஆனந்தமான செய்தியை அனைத்து ஊடகங்களும் பகிர்ந்து கொண்டுள்ளன. பஞ்சாப் மாநிலம் ஜலந்தா பகுதியில் இருந்து ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்குப்பின் இமயமலைத் தொடரை கண்களால் காண முடிகிறது. இந்தச் செய்தி ஆனந்தம் தருவதாக இருந்தாலும் நம்மைச் சிந்திக்க வைப்பதாகவும் இருக்கிறது.

ஆடம்பரமாய் வாழ விரும்பிய நம் பேராசையினால் நாம் தொலைத்து விட்டவை நம் கண்களுக்குப் புலப்படுத்த தொடங்கியுள்ளன. கண்முன்னே நாம் காண முடிவது இமய மலையை மட்டுமல்ல, நாம் தொலைத்துவிட்ட மகிழ்ச்சியை, ஆரோக்கியத்தை, நம் முன்னோரின் அமைதியான வாழ்க்கையை...

மனிதனின் முடக்கம் இயற்கையின் மகிழ்ச்சியாக நிற்பதை நாம் இந்த நிலையிலும் உணராவிட்டால் நம் ஆறாம் அறிவினால் பயன் என்ன?

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று நம் முன்னோர் நமக்கு வாழ்ந்து காட்டினர். நூறு ஆண்டுகள், குடும்பங்களில் மக்களோடு கூடி வாழ்ந்து ஆனந்தமும் பெரும்பேறுமாய் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தனர். அவற்றை அறியாமையால் நாம் தொலைத்திருக்கிறோம் எனும் உண்மையை வெள்ளிடை மலையாக நம் கண்முன்னே காற்று மாசு இல்லா வெளியில் உயர்ந்து நிற்கும் இமயம் சொல்லுகிறது.

இப்போதைய சவாலான காலத்தில் எத்தனை தவறான பாதையில் நாம் பயணித்திருக்கிறோம் என்பதை உணர்வதற்கு நேரம் வாய்த்திருக்கிறது. இதை தற்காலிக உணர்வுபூர்வ மனநிலையாகக் கடந்து விடாமல், ஆழ்ந்து சிந்தித்து அடுத்த தலைமுறைக்கு எது நன்மை பயக்கும் என்பதை உணர்ந்து அதற்கான வழியில் பயணத்தைத் தொடங்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

'எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க' என்ற வள்ளலார் பெருமானின் போதனையை மனங்கொள்வோம். இதுவரையிலான நமது உலகமயமாக்கல் எனும் பெரும் கனவிலிருந்து விழித்துக் கொள்வதும், அதன் இராட்சதப் பிடியிலிருந்தும் சங்கிலித் தொடராய் உலகம் முழுவதையும் பிணைத்து நிற்கும் மாயையிலிருந்தும் மெல்ல விடுபட்டு எளிய தூய வாழ்க்கைக்குத் திரும்புவோம். ஆடம்பரங்கள் ஒருநாளும் அமைதியைத் தருவதில்லை.






# ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் தேவையற்று வெளியே வராதீர்கள்!

## இராணுவத் தளபதி ஆலோசனை

கொழும்பு,ஏப்.19

ஊரடங்குச் சட்டம் நாளை முதல் படிப்படியாக தளர்த்தப்பட்டாலும் பொது மக்கள் சுகாதார பிரிவினர் வழங்கியுள்ள ஆலோசனைகளை உரியவகையில் பின்பற்ற வேண்டியது கட்டாயம் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இதேவேளை ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் திணைக்களங்கள், வங்கிகள் மற்றும் அரச நிறுவனங்கள் ஆகியன கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து ஜனாதிபதி ஊடக பிரிவு தெளிவுப்படுத்தியுள்ளது.

முக்கியமாக அத்தியாவசிய தேவைகளுக்காகவும் தொழிலுக்காகவும் வெளியில் செல்வோர் கட்டாயம் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியம் எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொது நிறுவனங்களின் இயல்பான செயல்பாட்டை முன்னெடுக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டுதல்களுடன் கூடிய சுற்றறிக்கை ஒன்றை ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில், கொழும்பு மாவட்டத்தில் உள்ள அரச நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பணிக்கு சமுகமளிக்க வேண்டும்.

அதேவேளை நாட்டின் ஏனைய மாவட்டங்களில் உள்ள அரச நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களில் ஐம்பது சதவீதமானோர் கடமைக்கு திரும்ப வேண்டும்.

ஏனையவர்கள் வீட்டிலிருந்து வேலை செய்ய முடியும் என்பதோடு யாரை வேலைக்கு அழைக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு நிறுவன உயரதிகாரியிடமே உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஊழியர்களுக்கு தேவையான வசதிகளை பெற்றுக் கொடுப்பது அந்த நிறுவன உயரதிகாரியின் பொறுப்பாகும் எனவும் தெரிவித்தார்.

அதேபோல் தனியார் நிறுவனங்கள் காலை 10 மணிக்கு திறக்கப்பட வேண்டும். அதேவேளை நிறுவனங்களின் தலைவர்கள் பணியாளர்களின் எண்ணிக்கையை தீர்மானிக்க வேண்டும்.



இதேவேளை ஜனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை அமைச்சகங்களின் செயலாளர்கள், மாகாண தலைமைச் செயலாளர்கள், துறைசார் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், கூட்டுதாபன தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பொது முகாமையாளர்களுக்காகவே வெளியிடப்பட்டுள்ளது.

வேலைத்தளங்களில் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தவும், பணியாளர்கள் வேலைக்கு வருவதற்கான வழிமுறையாகவும், மக்கள் கூட்டமாக ஒன்று கூடுவதை தடுக்கவும், வீட்டிலிருந்து தங்கள் கடமைகளைச் செய்யவும் நான்கு முக்கிய விடயங்களை உள்ளடக்கி இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அனைத்து அரசு நிறுவனங்களும் சமூக தூரம், முகம் கழுவுதல், கை கழுவுதல் மற்றும் பிற சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் எனவும் அதேபோல் சேவை பெற வரும் பொது மக்களின் கைகளை சுத்தம் செய்வதற்கான வசதிகளை வழங்க வேண்டும்.

மேலும், அனைத்து வகையான திருவிழாக்கள், யாத்திரை, சுற்றுலாக்கள், ஊர்வலங்கள், கூட்டங்கள் போன்றவை மீள அறிவிக்கும் வரை தடை செய்யவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும் மக்கள் கூட்டமாக கூடுவதால் அது வைரஸ் பரவலைத் தடுக்க தடையாக இருக்கும் என கருதி அனைத்து மத விழாக்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் இன்னும் முழுமையாக கட்டுப்படுத்தவில்லை என்பதால், ஜனாதிபதியின் ஊடக பிரிவு அனைவரையும் அனைத்து சுகாதார விதிமுறைகளுக்கும் கட்டுப்பட வேண்டும் என்றும், பொறுப்புடன் நடக்க வேண்டும் என்றும், ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும் போது பணிகளுக்காக வெளியில் செல்லுமாறும் அதனை தவிர வேறு தேவைக்காக வெளியில் நடமாடுவதை தவிர்க்குமாறும் முடியுமான வரை வீட்டிலேயே இருக்குமாறும் கேட்டுள்ளது.

இதேவேளை சமூகத்தில் கொரோனா வைரஸ் பரவுவது குறைவடைத்துள்ளதால் நாட்டில் உள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சிதெரிவித்துள்ளார்.

## ஐந்து பேர் குணமடைந்தனர்

கொழும்பு, ஏப். 19

கொரோனா வைரஸ் நோயாளிகளாக அடையாளம் காணப்பட்ட மேலும் 05 பேர் குண'மடைந்தனர் என சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

அதன்படி இலங்கையில் தொற்றுக்குள்ளானவர்களில் இதுவரை 91 பேர் குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## 215 மாணவர்களை இலங்கைக்கு அழைத்து வர அரசு நடவடிக்கை

கொழும்பு, ஏப். 19

வெளிநாடுகளிலுள்ள 215 மாணவர்கள் முதற்கட்டமாக இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

வரையறுக்கப்பட்ட விமான நிலையம், விமான சேவை நிறுவனத்தின் நடவடிக்கை பணிப்பாளர் செஹான் சுமணசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 215 மாணவர்களை பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய, இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இதற்கமைய முதலில் சார்க் வலய நாடுகளில் கல்வி கற்கும் மாணவர்களை இலங்கைக்கு அழைத்து வரும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நோயாளர்கள் எண்ணிக்கை அதிகம் என்கின்றார் ராஜித



இலங்கையில் அதிகமான கொரோனா வைரஸ் நோயாளர்கள் இருக்கின்றார்கள் என முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

'லங்காதீப' சிங்களப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதைக் கூறியுள்ளார் எனச் செய்தி வெளியாகியுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

அண்மையில் உலக சுகாதார ஸ்தாபனம் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்திய நாடுகளின் பட்டியல் ஒன்றை வெளியிட்டது.

அதில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்திய நாடுகளின் பட்டியலில் இலங்கை இருக்கவில்லை.

அத்துடன் இலங்கையில் அரசாங்கம் கூறுவது போல் அன்றி அதிகமான கொரோனா வைரஸ் நோயாளர்கள் இருக்கிறார்கள் எனவும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

## மின்னல் தாக்கி சிறுமி சாவு

பதுளை – ஹல்தமுல்ல பகுதியில் நேற்று தோட்டம் ஒன்றில் உள்ள மரத்தடியில் அமர்ந்திருந்த பத்து வயதுச் சிறுமி ஒருவர் மின்னல் தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

நாட்டில் தற்போது பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்வதால் பொது மக்களை அவதானமாகச் செயற்படுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது.

## சிலாபத்தில் தப்பி ஓடிய நோயாளி நேற்று மடக்கிப் பிடிக்கப்பட்டார்




சிலாபம் வைத்தியசாலையில் கொரோனா தொற்று சந்தேகத்தில் அனுமதிக்கப்பட்ட நபரொருவர் வைத்தியசாலையில் இருந்து தப்பியோடிய நிலையில், பொதுச் சுகாதார அதிகாரிகள் பொலிஸார் இணைந்து அந்த நபரை, நேற்று மாலை மடக்கிப் பிடித்துள்ளனர்.

சிலாபம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இந்த நபர், போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டவரென, பொலிஸார் தெரிவித்தனர். இந்நபர் இதற்கு முன்னர் கொழும்பு – நாகலகம் பகுதியில் மக்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டபோது, அங்கிருந்து தப்பிச் சென்றவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.04.2020 இல் வெளியிடப்பெற்றது.